## 3.5. **அழகுப் புல்தரை அமைத்தல்**

அழகுப் புல் தரையானது அகத்திற்கும், புறத்திற்கும் குதூகலத்தைத் தருவதோடு நாம் வசிக்கும் சூழ்நிலையை அழகுபடுத்தவும் பயன்படுகிறது. இப்புல்தரை துவங்கிய வரலாற்றைப் பார்க்கும் போது இவை இங்கிலாந்தில் தோன்றியதாக அறியப்படுகின்றன. இங்கிலாந்தில் காணப்படும் இயற்கையான, தொடர்ச்சியான சிறு மழைப்பொழிவால் அங்கு பெருமளவில் தரைப்பகுதிகளில் புற்கள் அடர்ந்து காணப்படும். இத்தகைய இயற்கை வனப்பைத் தங்களது தோட்டத்தின் முக்கிய அம்சமாக பயன்படுத்திக் கொண்டார்கள். இவ்வாறு இங்கிலாந்தில் தோன்றிய அழகுப் புல் வளர்ப்புக் கலையானது பின்னர் நாளாவட்டத்தில் உலகின் மற்ற பகுதிகளுக்கும் பரவியது. தற்போது இந்த அழகுப் புல் தரை வளர்ப்பானது பெரிய பூங்காக்களிலும், வீடுகள் மற்றும் மாளிகைகளின் முன் மெருகூட்டப் பயன்படுகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த் புல் தரை வளர்ப்பில் கையாளப்பட வேண்டிய வளர்ப்பு முறைகளை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

**நிலம் தயார் செய்தல்**

1. நிலத்தை முதலில் 45 செ.மீ. ஆழத்திற்கு நன்கு கொத்தி புழுதியாக்கி அதிலுள்ள சிறு கற்கள், பெரிய மண் கட்டிகள், கோரைக் கிழங்கு, அருகம் புல்லின் கிழங்கு போன்றவற்றைச் சுத்தமாகப் பொறுக்கி எடுத்து அப்புறப்படுத்த வேண்டும். பின் மக்கிய எருவையோ அல்லது மக்கிய மாட்டுச் சாணத்தையோ ஒரு சதுர மீட்டருக்கு 2 கிலோ என்ற அளவிலிட்டு நிலப்பரப்பைச் சமப்படுத்த வேண்டும். சமப்படுத்தும்பொழுது மழை நீர் வடிவதற்காக 3 மீ பரப்புக்கு 15 சென்டிமீட்டர் சரிவு கொடுத்து சமப்படுத்துதல் நல்லது. இவ்வாறு தயார் செய்த நிலத்திற்கு இரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவ்வாறு செய்தால் மண் நன்கு படிந்து அதில் உள்ள களைகள் முளைக்கும். அவற்றை எடுத்துவிட்டு மீண்டும் கொத்திச் சமப்படுத்த வேண்டும். அழகுப்புல்தரை வளர்ப்பதற்கு 5.0 முதல் 5.6 கார அமில நிலையுடைய மண் மிகவும் ஏற்றதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மண்ணில் அமிலம் மிகுதியாக இருந்தால் ஒரு சதுர மீட்டருக்கு 500 கிராம் சுண்ணாம்பை இட வேண்டும். களிகலப்பு மண் மற்றும் காரத்தன்மையுடைய மண் ஆகிவற்றிற்கு மேற்கூறிய அளவு ஜிப்சம் இடவேண்டும்.

**அழகு புல் வகைகள்**

புல் தரை அமைப்பதற்கு அருகம்புல், அகஸ்டியன் புல், உப்பருகு, நீலப் புல், சிக்குப் புல், சுப்பான் புல், கொரியன் புல், ஹைதராபார் புல் மற்றும் குட்டை பெர்முடா ஆகிய வகைகளை உபயோகப்படுத்தலாம். ஒவ்வொரு வகைப் புல்லினத்திற்கும் வெவ்வேறு தனித்தன்மையும் பயன்பாடும் உண்டு. அத்தகைய சிறப்புத் தன்மைகளை இப்பொழுது பார்க்கலாம்.

**அருகம் புல் வகைகள்**

புல்தரை அமைக்க பெருவாரியாகப் பயன்படுகிறது. *சைனோடான் இண்ர்மீடியஸ்* என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இப்புல் வகையானது சுமாரான மிருதுத் தன்தையுடனும் காணப்படும். இவை நிழற்பகுதி மற்றும் தண்ணீர் அதிகமாக கிடைக்கும் பகுதிகளில் புல் தரை அமைக்க உகந்தவை.

**உப்பருகு**

இப்புல்லினமானது சிறு சிறு முடிச்சுகளாக வளருவதால் இதனை சங்கிலிப் புல் என்றும் அழைப்பார்கள். ஸ்போரா போலஸ் டிரிமுலஸ் என்று தாவரவிலாளர்களால் அழைக்ப்படும் இச்சிற்றனமானது மிக மிருதுவான இலைகளுடன் வளரும் இயல்புடையவை. இந்தப் புல் வகையை களர் மற்றும் அதிக சூரிய ஒளி கிடைக்கும் நிலங்களில் புல் தரை அமைக்கப் பயன்படுத்தலாம்.

**நீலப்புல்**

போயா பிரட்டன்சிஸ் என்று அழைக்கப்படும் இந்தப் புல் வகையானது சுமாரான மிருதுத் தன்மையுடன் காணப்படும். இந்தப் புல் வகையானது அமில நிலங்கள் மற்றும் மலைப் பகுதிகளுக்கும் மிகவும் உகந்தது.

**சிக்கு புல்**

சொர சொரப்பான இலைகளுடைய இப்புல் வகையானது பென்னீசிட்டம் கிளேன்டஸிடினம் என்று தாவரவியலாளர்களால் பெயரிடப்பட்டுள்ளது. இவை அமில நிலங்கள் மற்றும் மலைப்பகுதிகளில் புல் தரை அமைக்க உகந்தவை.

**ஜப்பான் புல்**

ஓரளவு சொர சொரப்புத் தன்மையுடைய இப்புல் வகையானது ஜாய்சியா ஜப்பானிக்கா என்று அழைக்கப்படுகிறது. இவை மணற்பாங்கான மற்றும் அதிக சூரிய ஒளி படக்கூடிய பகுதிகளுக்கு மிகவும் உகந்தவை.

**மணிலா புல்**

ஜாப்சியா மேட்ரல்லா என்றழைக்கப்படும் இப்புல்வகையானது நடுத்தர மிருதுத் தன்மையுடன் காணப்படும். இவை பிரகாசமான சூரிய ஒளி கிடைக்கும் இடங்களில் புல் தரை அமைக்க மிகவும் உகந்தவை.

**கொரியன் புல்**

ஜாய்சியா டெலுயிபோலியோ என்றழைக்கப்படும் இப்புல் வகையானது மிருதுவான இலை அமைப்புடன் காணப்படும். இவை சூரிய ஒளி கிடைக்கும் திறந்தவெளியில் புல் தரை அமைக்க மிகவும் உகந்தவை.

**ஹைதராபாத் புல்**

சைனோடான் சிற்றினத்தைச் சார்ந்த இப்புல் வகையானது மிகவும் மிருதுவான இலை அமைப்புடன் காணப்படும். இவை அதிக சூரிய வெளிச்சம் கிடைக்கும் திறந்த வெளிப் பகுதிகளில் பயிரிட உகந்தவை.

**குட்டை பெர்முடா**

நடுத்தர மிருதுத் தன்மையுடன் காணப்படும் இப்புல் வகையானது சைனோடான் சிற்றினம் என அழைக்ப்படுகிறது. நல்ல சூரிய வெளிச்சம் கிடைக்கும் திறந்த வெளிப்பகுதிகளில் புல் தரை அமைக்கச் சிறந்தது.

**புல் தரை அமைக்கும் முறைகள்**

புல் தரையானது விதைகள், புல்பாய் நடவு, மண் சாணி கலந்து நடுதல், மற்றும் கரணை அல்லது கிழங்கு ஊன்று முறை ஆகிய முறைகளில் அமைக்கப்படுகின்றன. இந்த முறைகளை இங்கு காண்போம்.

**விதை**

நன்கு தயார்படுத்திய நிலத்தில் ஒரு பங்கு விதைக்கு ஐந்து பங்கு மணல் கலந்து 2 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். ஒரு சதுர மீட்டருக்கு 2.5 கிராம் விதை தேவைப்படும். விதைக்கும் முன் மண்ணை முள் கொத்தால் நக்கு கிளறி விட்டு விதைத்த பின்பு விதைகளைக் கொளமண் கொண்டு மூட வேண்டும். ஒரு மீட்டருக்கு 10 கிராம் பி.எச்.சி. மருந்து தூவி எறும்பு வராமல் தடுக்க வேண்டும். பின் பூவாளி கொண்டு தண்ணீர் தெளிக்க வேண்டும். விதை முளைக்க ஐந்து வாரம் ஆகும். புல் 5 செ.மீ. உயரம் வளர்ந்த பிறகு அறுத்த விட வேண்டும். இந்த நிலையில் புல் தரைக் கருவி கொண்டு கத்தரிக்கக் கூடாது. பின்பு உருளை கொண்டு நன்கு உருட்டி விட்டால் புல் நன்றாகப் படியும். “டூ” புல் என்றழைக்கப்படும் அருகம்புல் (சைனோடான் டேக்டைலான்) இம்முறையில் நன்கு வளரும்.

**புல் பாய் நடவு**

குறுகிய காலத்தில் புல் கரைகளை அமைக்கக் குளக்குரைகள் மற்றும் ஆற்றோரங்களில் ஏற்கனவே வளர்ந்த புல் தரைகளைக் கத்தைகளாக வெட்டி எடுத்து வந்து தேவையான இடத்தில் மரக் கொட்டாப்பிடி கொண்டு அப்பத்தைகள் ஒரே சீராகவும் சமமாகவும் படியுமாறு தட்டி விட வேண்டும். இரண்டு பத்தைகளுக்கு நடுவில் இருக்கும் சந்துகளை பொடியான மண்ணைக் கொண்டு நிரப்ப வேண்டும். பின் சற்றுக் கனமான கல் உருளை கொண்டு சுமார் 5 முதல் 6 நாட்களுக்கு ஒரு முறையாக 2 முதல் 3 தடவைகள் உருட்டி விட வேண்டும்.

**மண் சாணி கலந்து நடுதல்**

இந்த முறையில் புல்லின் வேர்களை 5-7 செ.மீ. நீளமுள்ளதாக நறுக்கிக் கொள்ள வேண்டும். நறுக்கிய வேர்களை ஒரு பங்கு மாட்டுச் சாணி கொண்ட கலவையில் கலந்து, அதைத் தயார் படுத்திய தரையில் 2.5 செ.மீ மொத்தத்திற்கு பரப்பி அதன்மேல் வைக்கோல் கொண்டு மூட வேண்டும். பின்னர் பூவாளி கொண்டு நீர் தெளிக்க வேண்டும். அதன்பின் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் தெளிக்க வேண்டும். அதன்பின் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்ச வேண்டும். புற்கள் 15 நாட்களுக்குள் துளிர் விட்டு வளர ஆரம்பிக்கும். ஆரம்பத்தில் வீச்சுக்கத்தியினைக் கொண்டு புற்களை அறுத்து விட வேண்டும். மூன்று மாதங்களுக்குப் பின்னரே புல்தரைக் கருவியை உபயோகிக்க வேண்டும்.

**கரணை அல்லது கிழங்கு ஊன்றுதல்**

இந்த முறையில் அருகம்புல்லின் கிழங்குகளையோ அல்லது 5 செ.மீ நீளமுள்ள அருகுகளையோ 5 செ.மீ இடைவெளி கொடுத்து நாற்று நடுவது போல சமப்படுத்தப்பட்ட எரு இட்ட நிலத்தில் நட வேண்டும். 15 நாட்களுக்குள் புல் துளிர் விட்டு வளர ஆரம்பிக்கும்.

ஏஸ்ட்டோ டர்ஃப் :

வளர்ந்த நாடுகளில் மேற்கூரைக் தோட்டங்களிலும் விளையாட்டு மைதானங்களிலும் செயற்கை புல்தரையானது மிகவும் பிரபலமடைந்துள்ளது. செயற்கை நாரிழைகளின் பிணைப்பிற்கு சீரான நீர்த் தெளிப்பு மிகவும் அவசியமாகும்.

**புல் தரை பராமரிப்பு**

**உருளை கொண்டு உருட்டுதல்**

இதனால் மேடு பள்ளங்கள் சமமாக்கப்படும். தக்க ஈரப்பசை உள்ள பொழுது உருளை கொண்டு உருட்ட வேண்டும். நிலம் மிகவும் ஈரமாகவோ அல்லது காய்ந்தோ இருக்கும்பொழுது உருட்டுதல் கூடாது.

**வெட்டும் கருவி கொண்டு வெட்டுதல்**

வளரும் புல்லை பூக்க விடாமல் வெட்டி விடுவது அவசியம். புல் தரைக் கருவியோ அல்லது வீச்சுக் கத்தி கொண்டோ 15 நாட்களுக்கு ஒரு முறை வெட்டி விட வேண்டும். ஆனால் புல்தரை அமைக்கப்பட்ட புதிதில் புற்கள் நன்கு படர்ந்து வளரும் வரை வெட்டும் கருவியை பயன்படுத்தக்கூடாது.

**உரமிடுதல்**

வருடம் இரு முறை சதுர மீட்டருக்கு ஒரு கிலோ மாட்டு எரு, 30 கிராம் அம்மோனியம் சல்பேட், 16 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 16 கிராம் மீயூரேட் ஆப் பொட்டாஷ் இட வேண்டும். உரமிட்ட பிறகு நன்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**களைக் கட்டுப்பாடு**

புல் தரையில் கோரை வகைக் களைகள் அதிகமாக வளர்ந்து காணப்படும். இவற்றைக் கூர்மையான ஊசி கொண்டு கிழங்குகளைக் குத்தி அகற்றிவிடுவதன் மூலமும் அன்சார் 529 என்ற களைக் கொல்லியை லிட்டருக்கு 3 மில்லி என்ற அளவில் கலந்து தெளிப்பதின் மூலமும் கட்டுப்படுத்தலாம். புல் தரையில் தோன்றும் அகன்ற இலைக் களைகளை கட்டுப்படுத்த 2-4-டி என்ற களைக் கொல்லியை ஏக்கருக்கு 4 கிலோ என்ற அளவில் பயன்படுத்த வேண்டும். களை அகற்றப்பட்ட இடத்தில் பொடி மண்ணுடன் கலந்த புல்லின் வேர்களைக் கொண்டு நிரப்ப வேண்டும்.

**பயிர்ப்பாதுகாப்பு**

புல் தரையை வெள்ளை எறும்புகளஇ வெட்டுப்புழுக்கள்இ குடைவுப் புயுழுஇ இலை தத்துப் பூச்சி மற்றும் ầற்புழுக்கள் அதிதமாகப் பாதித்து புல் தரையின் அழகிற்கும் வளர்ப்பிற்கும் பாதகம் உண்டு பண்ணுகின்றன. இத்ததைய சேதம் உருவாக்கும் பூச்சிகளைப் இதன் கட்டுப்பாடு பற்றியும் இங்கு காண்போம்.

**வெள்ளை எறும்புகள்**

இவற்றின் பாதிப்பு காணப்படும் பகுதிகளில் இவை புல்லையும்இ மண்ணையும் பாதிப்பு ஆங்காங்கே சிறு மண் கேடுகளை உருவாக்குகின்றன. பாதிப்பு காணப்படும் பகுதிகளில் விண்டேன் 10 சதவீதத் தூளைத் தூவி கட்டுப்படுத்தலாம்.

**வெட்டுப் புழு**

இவை மண்ணின் மேல் பரப்பில் காணப்படும் புல் தண்டுகளை வெட்டித் தின்று விடுவதால் ஆங்காங்கே புற்கள் திட்டுத்திட்டாகக் கருகிக் காணப்படும் பி.எச்.சி.10

சதவீதத்தூளை இவற்றின் பாதிப்பு காணப்படும் பகுதிகளில் தூவி இப்புழுக்களைக் கட்டுப்டபடுத்தலாம்.

**குடைவுப்புழு**

இவை புற்களின் வேர்களையும் தண்டுகளையும் குடைந்து கருகிய திட்டுக்களை உருவாக்குகின்றன. இதனை லிண்டேன் 10 சதவீதத் தூளை பாதிப்பு காணப்படும் பகுதிகளில் தூவி இப்புழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இவை தத்துப்பூச்சி

இவை இலையில் சாற்றை உறிஞ்சி விடுவதால் இலைகள்இ பட்டையாகஇ பட்டையாக வெள்ளை மற்றும் மஞ்சள் கலந்த கோடுகளுடன் காணப்படும் கடுமையாக பாதிக்கப்பட்ட பற்கள் வாடி இறுதியில் உலர்ந்து போய்விடுகின்றன. இதனை லிட்டருக்கு 1மில்லி ரோகார் என்ற மருந்தைத் தெளித்துக் கட்டுப்படுத்த வேண்டும்.

áற்புழுக்கள்

இவை புற்களின் வேர்களைப் பாதிப்பதால் புற்கள் வெளிறிக் காண்ப்படும். அதனை சதுர மீட்டருக்கு 40 கிராம் பியூராடான் என்ற குருணை மருந்தினை பயன்படுத்திக் கட்டுப்படுத்தலாம்.

**புல்தரை பராமரிப்பில் ஏற்படும் சில பிரச்சனைகள்**

**வெளிறுதல்**

இரும்பு மற்றும் மாங்கனீசு பற்றாக்குறையால் புல் தரை வெளிறி மஞ்சாளாகக் காணப்படும். இதனை நிவர்த்தி செய்ய ௵25 கிராம் பெரஸ் சல்பேட் என்னும் உப்பை 10 லிட்டர் நீரில் கலந்து 100 சதுர மீட்டருக்குத் தெளிக்க வேண்டும்.

`மாங்கனீசு பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 100 கிராம் மாங்கனீசு 10 லிட்டர் நீரில் கல்ந்து 100௵ சதுர மீட்டருக்கு தெளிக்க வேண்டும்.

**நாய் சிறுநீர்**

புல் தரையின் மேல் நாய்கள் சிறுநீர் கழிப்பதால் வட்ட வடிவில் புல்தரை காய்ந்து காணப்படும் இதனால் காய்ந்த புற்களைப் பிடுங்கி அதற்றிவிட்டு புதிய புற்களை நடவேண்டும்.

**ஒருங்கற்ற முறையில் வெட்டுவதால் புல் காய்தல்**

இவற்றை நிவர்த்தி செய்ய புல் தரை வெட்டும் கருவியின் வெட்டு விளிம்பை நன்கு கூர்மையாகப் பராமரிக்க வேண்டும். புற்களை மூன்றில் ஒரு பாகம் மட்டும் வெட்டி நீக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அடிப்பாகத்தை மண்ணோடு சேர்த்து வெட்டுதலைத் தவிர்க்க வேண்டும்

**ஒழுங்கற்ற தண்ணீர் பாசனம்**

இதனால் புற்கள் காய்ந்தும், அழுகியும் போய்விட வாய்ப்புள்ளது. இதனை நிவர்த்தி செய்ய புல் தரை நனையும் வரை மட்டும் தேவையான அளவு தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.